





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*






# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 03.11.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- நியமனங்கள்
- பொருளாதார நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்












## இந்திய நிகழ்வுகள்

- **மணிப்பூர்** அரசானது **2018ம் ஆண்டிற்கான ஷாங்காய் திருவிழாவை** மணிப்பூரின் கெய்புல் லம்ஜாவோ, இம்பால் மற்றும் மாவோ ஆகிய 3 இடங்களில் **நவம்பர் 21 முதல் 30** வரை கொண்டாடவிருக்கிறது.
  - இத்திருவிழாவானது, அம்மாநிலத்தை உலகளாவிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்த ஆண்டுதோறும் மணிப்பூர் சுற்றுலாத் துறையால் கொண்டாடப்படும் கலாச்சார விழாவாகும்.

- **பஞ்சாபின் கபூர்தலாவில்** உள்ள **புஷ்பா குஜ்ரால்** அறிவியல் நகரத்தில் இந்தியாவின் **முதல் ரோபோட்டிக் டைனோசர் காட்சிக் கூடம்** பொதுமக்களின் பார்வைக்காக அமைக்கப்பட்டுள்ளது.
  - இந்த காட்சிக் கூடமானது மத்திய மற்றும் மாநில அரசின் கூட்டு முயற்சியாகும். இந்த **புஷ்பா குஜ்ரால் அறிவியல் நகரமானது** வட இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட மிகப் பெரிய திட்டமாகும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- புனேவில் நடைபெற்று வரும் தேசிய சீனியர் ஆடவர் குத்துச் சண்டை சாம்பியன் போட்டியில் நடப்பு சாம்பியனான **"மணிஷ் கௌஷிக்" 60 கிலோ எடைப்பிரிவில் இரண்டாவது முறையாக தங்கம்** வென்றுள்ளார்.
  - உலக சாம்பியன் போட்டியில் பதக்கம் வென்ற "சௌரவ் பிதுரி" 56 கிலோ எடைப் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- குறைந்த திறன் கொண்ட வயர்லெஸ் சிஸ்டம் மற்றும் நெட்வொர்க்கிங் சிஸ்டங்களில் பயன்படுத்தக் கூடிய, **இந்தியாவின் முதல் மைக்ரோ பிராசசரை** ஐஐடி – மெட்ராஸ் ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
  - இதற்கு சக்தி எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதன் மூலம் முக்கிய துறைகளான பாதுகாப்பு, அணு ஆயுத கட்டமைப்பு, அரசு அலுவலகம் மற்றும் துறைகளில் பயன்படுத்தும் போது குறிப்பிடத்தக்க பயன்களை பெற முடியும்.

WeShine Academy™

## விருதுகள்

- ஹார்வர்ட் பல்கலைக்கழகமானது, நோபல் பரிசு பெற்றவரான **மலாலா யூசாப்ஸாவுக்கு,** அவரின் பெண்கல்வியை மேம்படுத்தும் பணிகளுக்காக, **கிளாய்ட்ஸ்மேன் விருது – 2018** என்ற விருதை வழங்கியுள்ளது.
    - உலகமெங்கும் உள்ள மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் செயல்பாட்டுக்காக இந்த விருதானது வழங்கப்பட்டது.
- குறிப்பு
    - மலாலா 2014ல் தனது 17 வயதில் நோபல் அமைதிப் பரிசைப் பெற்று, இளம் வயதில் நோபல் பரிசை பெற்றவர் என்ற பெருமையை பெற்றார்.
    - இவரை கௌரவிக்கும் வகையில் ஐ.நா சபையானது **ஜுலை 12ம் தேதியை மலாலா தினம்** என அறிவித்துள்ளது.

## நியமனங்கள்

- உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகளாக பணியாற்றி வரும் நீதிபதிகள் **ஹேமந்த் குப்தா, அஜய் ரஸ்தோகி, எம்.ஆர்.ஷா, ஆர். சுபாஷ் ரெட்டி** ஆகியோரை உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- குறிப்பு
    - உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகள் **Article-127ன் படி குடியரசுத் தலைவர்,** உச்சநீதிமன்றத்தின் **தலைமை நீதிபதியின் பரிந்துரையின்** படி நியமிக்கப்படுகிறது.

## பொருளாதார நிகழ்வுகள்

- பொதுத்துறை வங்கிகளில் 59 நிமிடங்களில் கடன் கிடைக்கும் வகையிலான **"PSB loans in 59 minutes Portal"** என்ற இணைய சேவையை மத்திய அரசு சார்பில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
    - இதன் மூலம் **MSME** மூலம் தொழில் தொடங்குவதற்காக எளிதில் பொதுத்துறை வங்கிகளிடமிருந்து கடன் பெறலாம்.

மேலும், ஏற்றுமதியில் **25 சதவிகிதம் MSME** ன் பங்கு உள்ளது என **நிர்மலா சீதாராமன்** கூறியுள்ளார்.

## முக்கிய தினங்கள்

- **ராஷ்ட்ரிய ஏக்தா திவாஸ் (தேசிய ஒற்றுமை தினம்) – அக்டோபர் 31**
    - நமது நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பிற்கு எதிரான உண்மையான மற்றும் மறைந்திருக்கும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு நமது நாட்டின் உள்ளார்ந்த வலிமை மற்றும் நிலைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, ஆண்டு தோறும் **'சர்தார் வல்லபாய் படேலின்'** பிறந்த நாளான அக்டோபர் 31 அன்று தேசிய ஒற்றுமை தினமாக கொண்டாடப்படுகிறது.
- குறிப்பு
    - சர்தார் வல்லபாய் படேலுக்கு இந்திய அரசு 1991ல் **"பாரத ரத்னா"** விருதளித்து சிறப்பித்துள்ளது.